தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | : | 20/2024 | சாட்சியம் | : | **WW1** |
| **Name** | : | திரு.முத்துக்குமரன் | | | |
| **Date** | : | **18.07.2025** | | | |
| **Time** | : | **11.14 a.m to 11.37 a.m** | | | |

தொ.த.சா.1.திரு.முத்துக்குமரன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை

2016 ஆம் ஆண்டு எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன். நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். நான் எதிர் மனுதாரர் நிறுவனத்தில் bender machine ல் வேலை பார்த்தேன். பென்டிங் பிரிவில் வேலை பார்த்தேன் என்றால் ஆமாம். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நிறுவனத்தில் அறிவிப்புகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கொடுக்கப்படும் என்றாலும் அதனை படித்து பார்த்து தெரிந்து கொள்வேன் என்றாலும் ஆமாம். எதிர்மனுதாரர் நிறுவனம் சிறு தொழில் நிறுவனம் என்றால் ஆமாம். அதில் 33 பேர் மட்டுமே நிரந்தர தொழிலாளர்கள் என்றால் ஆமாம். 33 பேரும் வேறு வேறு துறையை சேர்ந்தவர்கள் என்றால் ஆமாம். எங்கள் கம்பெனிக்கு கிடைக்கும் ஆர்டரை பொறுத்து தான் எங்களுக்கு வேலை என்றால் ஆமாம். ஆர்டர் இல்லாத சமயத்தில் எங்களுக்கு வேலை இருக்காது என்றால் வேறு வேலை எதுவும் கொடுப்பார்கள். ஆர்டர் இல்லாத

சமயத்திலும் நிர்வாகம் எங்களுக்கு முறையான ஊதியம் வழங்கி வரும் என்றால் ஆமாம். 2019 கோவிட் காலம் தொட்டு எங்கள் நிர்வாகத்திற்கு போதிய ஆர்டர் எதுவும் வரவில்லை என்றால் சரியல்ல குறைந்த ஆர்டர்கள் வந்தன. கடந்த நான்கு வருடங்களாக நிதி நெருக்கடியில் இருக்கும் காரணத்தினால் போதிய ஊதியம் தர இயலாத நிலையில் நிர்வாகம் உள்ளது என்றால் சரியல்ல. போதிய ஆர்டர் இல்லாத காரணத்தினால் நிர்வாகம் Scrap மெட்டீரியலை விற்று எங்களுக்கு ஊதியம் வழங்கினார்கள் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் இருந்து தயாரித்து அனுப்பப்பட்ட உதிரி பாகங்கள் வெளிநாட்டில் முற்றிலும் நிராகரிக்கப்பட்டு விட்டது என்றால் நிராகரிக்கப்பட்டது ஆனால் அந்த உற்பத்தியை பணியில் நாங்கள் ஈடுபடுத்தப்படவில்லை நாங்கள் இந்தியாவிற்குள் விற்கப்படும் பொருட்கள் தயாரிப்பில் மட்டும் தான் ஈடுபடுத்தப்பட்டோம் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட விவரம் எங்களுக்கு பின்னர் தான் தெரிவிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் நிறுவனம் ப்ளாக் லிஸ்ட் கேட்டகிரியில் கொண்டுவரப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு நிர்வாகம் எங்களிடம் தெரிவித்தது. அதன் காரணமாக யாரும் எங்கள் நிறுவனத்திற்கு ஆர்டர் கொடுக்க முன்வரவில்லை என்றால் தெரியாது. போதிய ஆர்டர் இல்லாத காரணத்தினாலும் நிர்வாகம் நிதி நெருக்கடியில் இருந்த காரணத்தினாலும் ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒவ்வொரு துறைக்கும் உள்ள சீனியாரிட்டி லிஸ்ட் அறிவிப்பு பலகையில் 05.12.2022 அன்று ஒட்டப்பட்டது என்றால் எங்களை வேலையில் இருந்து நீக்கிய பின்னர் முன் தேதியிட்டு

அவ்வாறு ஒட்டப்பட்டது. அவ்வாறு ஒட்டப்பட்ட சீனியாரிட்டி லிஸ்டில் வேறுபாடு உள்ளது என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது என்றால் தெரிவிக்கப்பட்டது எழுத்து மூலமாக தெரிவிக்கப்படவில்லை. எங்களுக்கு பின்னர் வேலைக்கு வந்தவர்கள் எல்லாம் வேலையில் இருக்கிறார்கள் நான் செய்த வெல்டிங் துறையில் எனக்குப் பின்னர் வேலையில் சேர்ந்த தொழிலாளர் யார் என்றால் அவ்வாறு யாரும் இல்லை. CEO யிடம் அனைத்து தொழிலாளர்களும் சென்று ஆட்சேபனையை தெரிவித்தோம். 16.12.2022 அன்று நிர்வாகம் ஆட்குறைப்பு அறிவிப்பை வெளியிட்டது என்றால் ஆமாம். ஆனால் அந்த அறிவிப்பை பார்த்த பொழுது அது முன் தேதியிட்டு ஒட்டப்பட்டிருந்தது. என்ன தேதி அதில் குறிப்பிட்ட பட்டியிருந்தது என நினைவில்லை. அந்த ஆட்குறைப்பு அறிவிப்பில் சட்டப்படி கிடைக்கக்கூடிய பணப்பயன் மற்றும் ஒரு மாதம் அறிவிப்பு காலத்திற்கான தொகை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டிருந்தது என்றால் ஆமாம். ஆட்குறைப்பு அறிவிப்பு மற்றும் பணப்பயன் ஆகியவற்றை எதிர்த்து அன்றைய தினமே நாங்கள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினோம் என்றால் ஆமாம். மறுநாள் 17 ஆம் தேதியும் உள்ளிருப்பு போராட்டம் நடந்தது என்றால் இல்லை. பதினேழாம் தேதி மதியம் 12 மணி வரை எதிர்மனுதாரர் நிறுவனத்தில் இருந்திருப்போம். தொழில்துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் எங்களின் போராட்டத்தை முடித்துக் கொள்ள அறிவுறுத்தினார்கள் என்றால் ஆமாம். ஆட்குறைப்பு அறிவிப்பு மற்றும் பணப்பயனை நாங்கள் வாங்க மறுத்த

காரணத்தினால் நிர்வாகம் அறிவிப்பை எங்கள் வீட்டு விலாசத்திற்கு அனுப்பியது என்றால் ஆமாம். அறிவிப்பை பெற்ற பின்னரும் பணப்பயனை நாங்கள் நிர்வாகத்திடமிருந்து வாங்கவில்லை என்றால் ஆமாம். 22.12.2022 அன்று நிர்வாகம் ஆட்குறைப்பு பணப்பயன் மற்றும் அறிவிப்பு காலத்திற்கான பணத்தை எங்கள் வங்கி கணக்கில் செலுத்தியது என்றால் ஆமாம். அந்தத் தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகையை நான் என்னுடைய சொந்த பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டு விட்டு பாக்கியை நிர்வாகத்திற்கு அனுப்பிவிட்டேன் என்றால் இல்லை முழு தொகையும் அனுப்பிவிட்டேன். அதன் பிறகு தொழிலாளர் துறையில் மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். பேச்சுவார்த்தை சுமுகமாக முடியாத காரணத்தினால் சமரசம் முறிவறிக்கை வழங்கப்பட்டது என்றால் ஆமாம். வழங்கப்பட்ட பின்னர் அனைவரும் நிர்வாகத்திடம் பேச்சுவார்த்தை நடத்தினோம் என்றால் ஆமாம். நிர்வாகத்துடன் ஏற்பட்ட பேச்சுவார்த்தையில் சமரசம் ஏற்பட்டு 18(1) கீழான ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டோம் என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போட்டது என் உடன் வேலை பார்த்த சக தொழிலாளர்கள் என்றால் ஆமாம். மேற்படி ஒப்பந்தத்தில் ஆட்குறைப்பு பணப்பயனை ஏற்றுக் கொள்வதாகவும் இனி வேலை கேட்டு வரமாட்டோம் என நிபந்தனை கண்டிருந்தது என்றால் இல்லை. நிர்வாகம் மீண்டும் செயல்பட தொடங்கும் பட்சத்தில் எங்களுக்கு முன்உரிமை கொடுத்து எங்களையே மீண்டும் வேலைக்கு எடுத்துக்

கொள்வதாக உறுதி அளித்திருந்தது. 18(1) கீழான ஒப்பந்தம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆட்குறைப்பு பணப்பயன் ஒரு காசோலையாகவும் எதிர்காலத்தில் வேலை கேட்கமாட்டோம் என ஒப்புக்கொண்டு கருணைத்தொகை பொருத்து ஒரு காசோலையும் வழங்கப்பட்டது என்றால் காசோலை வழங்கப்பட்டது ஆனால் மீண்டும் வேலை கேட்க மாட்டோம் என ஒப்புக்கொள்ளவில்லை. எதிர்மனுதாரர் நிறுவனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் Sun max ல் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் ஆமாம். ஆட்குறைப்பு அறிவிப்புக்கான பணம் நஷ்ட ஈடு தொகை ஆகியவற்றை பெற்றுக் கொண்டும் மீண்டும் வேலை கேட்க மாட்டேன் என தெரிவித்து கருணைத்தொகை பெற்றுக் கொண்டும் அதனை மறைத்து இந்த நீதிமன்றத்தை அணுகி இருக்கிறேன் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் நிறுவனத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கும் காரணத்தினாலும் அதன் பிறகு வேறு நிறுவனத்தில் வேலை பார்த்த காரணத்தினாலும் எதிர்மனுதாரருக்கும் எனக்கும் தொழிலாளி முதலாளி என்ற உறவு முறை இல்லை என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு ஏற்கத்தக்கது அல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

S SUJATHA
Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.07.21 18:41:18 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:18.07.2025.